©
தமிழ்நாடு அரசு
2019

[Regd. No. TN/CCN/467/2012-14.
[R. Dis. No. 197/2009.
[விலை : ரூ. 18.80 காசு

# தமிழ்நாடு அரசிதழ்

ஆணையின்படி வெளியிடப்பட்டது.

எண் 40] சென்னை, புதன்கிழமை, அக்டோபர் 2, 2019
புரட்டாசி 15, விகாரி, திருவள்ளுவர் ஆண்டு–2050

## பகுதி IV—பிரிவு 2 இன் இணைப்பு

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் பின்வரும் சட்டமானது, 2019–ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் 31–ஆம் நாளன்று ஆளுநரின் ஏற்பிசைவைப் பெற்றது மற்றும் அது பொதுத் தகவலுக்காக இதன் மூலம் வெளியிடப்படுகிறது:–

**சட்ட எண் 34/2019**

**2016 – ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டத்தை மேலும் திருத்தம் செய்வதற்கானதொரு சட்டம்.**

இந்தியக் குடியரசின் எழுபதாம் ஆண்டில் தமிழ்நாடு சட்டமன்ற பேரவையினால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:–

குறுந்தலைப்பு மற்றும் தொடக்கம்

1. (1) இந்தச் சட்டம் 2019 ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் (பணிநிபந்தனைகள்) திருத்தச் சட்டம் என்று வழங்கப் பெறும்.

(2) (a) பிரிவு 2, 2016 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 15 ஆம் நாளன்று செல்லாற்றலுக்கு வந்து விட்டிருப்பதாகக் கொள்ளப்படுதல் வேண்டும்.

(b) பிரிவுகள் 3, 6 மற்றும் 7 ஆம் பிரிவின் (1) மற்றும் (2) ஆம் உட்பிரிவு மற்றும் பிரிவு 8, 2017 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 11 ஆம் நாளன்று செல்லாற்றலுக்கு வந்து விட்டிருப்பதாகக் கொள்ளப்படுதல் வேண்டும்.

(c) பிரிவு 4, 2017 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 1 ஆம் நாளன்று செல்லாற்றலுக்கு வந்து விட்டிருப்பதாகக் கொள்ளப்படுதல் வேண்டும்.

(d) பிரிவு 5, 2016 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 27 ஆம் நாளன்று செல்லாற்றலுக்கு வந்து விட்டிருப்பதாகக் கொள்ளப்படுதல் வேண்டும்.

தமிழ்நாடு சட்டம் 14/2016

3 ஆம் பிரிவிற்கான திருத்தம்

2. (இதன் பின்பு முதன்மைச் சட்டம் எனக் குறிப்பிடப்படுவதான) 2016ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் (பணிநிபந்தனைகள்) சட்டத்தின் 3 ஆம் பிரிவில் (j) கூறில், (vii) ஆம் கூறுக்குப் பதிலாக பின்வரும் உட்கூறுகள் மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும். அதாவது:–

(vii) 1987 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 14 ஆம் நாளுக்கு முன்பு ஆறு மாதங்களுக்கு மேம்பட்டு இராணுவ தபால் பணியில் மாற்றுப் பணியில் இருந்துள்ள நபர் எவரும்;

(viii) வெளியேற்றப்பட்ட அல்லது மருத்துவ அடிப்படையில் விடுவிக்கப்பட்ட மற்றும் மருத்துவ அல்லது மாற்றுத்திறன் அடிப்படையில் ஓய்வூதியம் வழங்கப்பட்டுள்ள நபர் எவரும்;

(ix) அவருடைய பணி நீண்ட காலத்திற்குத் தேவைப்படாது என்கின்ற காரணத்திற்காக மற்றும் ஓய்வூதியம் பெறப்பட்டுள்ளதற்காக இராணுவ விதி 13(3) III (V) இராணுவ விதியின்படி 1987 ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் அன்று அல்லது அதன் பின்பு விடுவிக்கப்பட்ட நபர் எவரும்;

(x) நேரத்திற்கேற்ப அரசால் அறிவிப்பு செய்யப்படலாகிறவாறான அத்தகைய பிற நபர்

**வரம்புரையாக:** அனைத்து நேர்வுகளிலும் பணி எதிலும் பதவி ஒன்றிற்காக அல்லது பிரிவு அல்லது இனத்திற்காக ஒரு தடவை பணி நியமனம் செய்யப்பட்டிருக்கின்ற முன்னாள் இராணுவத்தினர் ஒருவர் அவருடைய மேலுமான பணியமர்த்துவதற்காக அவர் ஒரு முன்னாள் இராணுவத்தினராக பணி செய்திருக்கிறேன் என்பதற்காக சலுகையை கோர இயலாது.

**மேலும் வரம்புரையாக:** இராணுவ விதி 13(3) III(V)இன்படி 1987 ஆம் ஆண்டு ஜூலைத் திங்களுக்கு முன்பு அவருடைய பணி நீண்ட காலத்திற்குத் தேவைப்படாது என்கின்ற காரணத்திற்காக விடுவிக்கப்பட்ட நபர் முன்னாள் இராணுவத்தினராக ஆக மாட்டார்.

4 ஆம் பிரிவிற்கான மாற்றாக்கம்

3. முதன்மைச் சட்டத்தின் 4 ஆம் பிரிவிற்காக பின்வரும் பிரிவு மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும், அதாவது:–

"4. அரசின் கீழ் பதவிகளைக் கொண்டிருக்கும் நபர்கள் இணைப்புப் பட்டியல் XIII இல் குறித்துரைக்கப்பட்டவாறு தொகுதிகளாக வகைப்படுத்தப்படுதல் வேண்டும்."

8 ஆம் பிரிவிற்கான திருத்தம்

**4.** முதன்மைச் சட்டத்தின் 8 ஆம் பிரிவில் முதலாம் வரம்புரையில் ''பட்டப்படிப்பு ஒன்றை வைத்திருப்பவர்'' என்கின்ற சொற்றொடர் விட்டுவிடப்படுதல் வேண்டும்.

20 ஆம் பிரிவிற்கான திருத்தம்

**5.** முதன்மைச் சட்டத்தின் 20 ஆம் பிரிவில் (5) ஆம் உட்பிரிவிற்கான வரம்புரையில் விட்டுவிடப்பட்டது.

26 ஆம் பிரிவிற்கான திருத்தம்

**6.** முதன்மை சட்டத்தின் 26 ஆம் பிரிவில், 2 ஆம் உட்பிரிவிற்கான வரம்புரையில், ''தர ஊதியம் இரண்டாயிரம் மற்றும் எண்ணூறு ரூபாய்க்கு'' மிகாத தர ஊதியத்துடன் உள்ள பதவிகளுக்கான நேரடி பணி நியமனம் என்கின்ற நேர்வில் வகை செய்யப்பட்டிருப்பது'' என்கின்ற சொற்றொடருக்குப் பதிலாக ''ஊதிய அமைப்பு முறையில் நிலை 10 க்கு மிகாத ஊதியத்துடன் உள்ள பதவிகளுக்கான நேரடி நியமனம் என்கின்ற நேர்வில்'' என்ற சொற்றொடர் மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்.

பிற சொற்றொடர்களால் குறித்த சில சொற்றொடர் களுக்கான சுட்டுகைகளின் மாற்றாக்கம்

**7.** முதன்மைச் சட்டத்தில்

(1) (i) 7 ஆம் பிரிவின் (i) ஆம் உட்பிரிவில், 40 ஆம் பிரிவின் (5) ஆம் உட்பிரிவின் (ii) ஆம் மற்றும் (iii) ஆம் கூறுகளில் மற்றும் XI ஆம் இணைப்புப் பட்டியலிலுள்ள ''ஊதிய ஏற்றமுறை'' என்கின்ற சொற்றொடருக்குப் பதிலாக அது எங்கெல்லாம் வருகின்றதோ அங்கெல்லாம் ''ஊதிய அமைப்பு முறையிலுள்ள ஊதியத்தின் நிலைகள்'' என்ற சொற்றொடர் மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்.

(ii) 39 ஆம் பிரிவில் ''காலமுறைப்படியான ஊதிய ஏற்ற முறை'' மற்றும் ''காலமுறைப்படியான ஏற்றமுறை'' என்கின்ற சொற்றொடருக்குப் பதிலாக ''ஊதிய அமைப்பு முறையிலுள்ள ஊதியத்தின் நிலைகள்'' என்ற சொற்றொடர் மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்.

(2) (i) (3)ஆம் பிரிவின் (a) கூறில் 29 ஆம் பிரிவின் (6) ஆம் உட்பிரிவிற்குரிய வரம்புரையில் 40 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவில் 41 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவிற்குரிய இரண்டாம் வரம்புரையில் மற்றும் 47 ஆம் பிரிவின் 7 ஆம் உட்பிரிவிலுள்ள ''ஊதிய ஏற்ற முறை அல்லது ஊதியக் கட்டு'' என்ற சொற்றொடருக்கு பதிலாக அது எங்கெல்லாம் வருகிறதோ அங்கெல்லாம் ''ஊதிய அமைப்பு முறையில் உள்ள ஊதியத்தின் நிலைகள்'' என்ற சொற்றொடர் மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்.

(ii) 7 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவில் ''கால ஊதிய ஏற்றமுறை அல்லது ஊதிய கட்டு'' என்கின்ற சொற்றொடர் வரும் இரண்டு இடங்களில் ''ஊதிய அமைப்பு முறையில் உள்ள ஊதிய நிலைகள்'' என்ற சொற்றொடர்க்கு மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்.

(iii) 28 ஆம் பிரிவில் (2) ஆம் உட்பிரிவில் மற்றும் 47 ஆம் பிரிவின் (6) ஆம் உட்பிரிவில் (ii) ஆம் கூறில் இரண்டு இடங்களில் எங்கெல்லாம் ''காலமுறை ஊதிய ஏற்றமுறை அல்லது ஊதிய கட்டு'' என்கின்ற சொற்றொடர்க்கு பதிலாக ''ஊதிய அமைப்பு முறையில் உள்ள ஊதியத்தின் நிலைகள்'' என்ற சொற்றொடர் மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்.

**8.** முதன்மைச் சட்டத்திற்குரிய XII ஆம் இணைப்புப் பட்டியலுக்கு பிறகு பின்வரும் இணைப்புப் பட்டியல் சேர்க்கப்படுதல் வேண்டும், அதாவது :–

**"இணைப்புப் பட்டியல் – XIII**

[4 ஆம் பிரிவைப் பார்க்க]

XIII ஆம் புதிய இணைப்பு பட்டியலினை சேர்த்தல்

தொகுதி A 59,300 – 1,87,700 ரூபாயிலிருந்து 1,28,900 – 2,25,000 ரூபாய் வரையிலான ஊதிய அளவினை பெறும் பதவிகளில் உள்ள பணியாளர்கள் (ஊதிய அமைப்பு முறையில் உள்ள 25 முதல் 32 வரையிலான நிலைகள்)

தொகுதி B 35,900 – 1,13,500 ரூபாயிலிருந்து 57,700 – 1,82,400 ரூபாய் வரையிலான ஊதிய அளவினை பெறும் பதவிகளில் உள்ள பணியாளர்கள் (ஊதிய அமைப்பு முறையில் உள்ள 13 முதல் 24 வரையிலான நிலைகள்)

தொகுதி C 15,900 – 50,400 ரூபாயிலிருந்து 35,600 – 1,12,800 ரூபாய் வரையிலான ஊதிய அளவினை பெறும் பதவிகளில் உள்ள பணியாளர்கள் (ஊதிய அமைப்பு முறையில் உள்ள 2 முதல் 12 வரையிலான நிலைகள்)

தொகுதி D 15,700 – 50,000 ரூபாய் வரையிலான ஊதிய அளவினை பெறும் பதவிகளில் உள்ள பணியாளர்கள் (ஊதிய அமைப்பு முறையில் உள்ள 1 ஆம் நிலை)".

(ஆளுநரின் ஆணைப்படி)

**ச. கோபிரவிக்குமார்,**
*அரசுச் செயலாளர் (மு.கூ.பொ),*
*சட்ட (ஆட்சி மொழிப்பிரிவு)த் துறை.*

(தமிழாக்கம்)

**க. நரசிம்மன்,**
*உதவி இயக்குநர்,*
*சட்ட (ஆட்சி மொழிப்பிரிவு)த் துறை.*